செய்தி வெளியீடு எண்:565 நாள்: 01.09.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (1.9.2017) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தாதாரர்களுக்கு விலையில்லா செட்டாப் பாக்ஸ்களை வழங்கி, சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள டிஜிட்டல் ஒளிபரப்பு சேவைக்கான MPEG 4 தொழில்நுட்பத்தில் தரம் உயர்த்தப்பட்ட கட்டுப்பாட்டு அறையை திறந்து வைத்து, டிஜிட்டல் ஒளிபரப்பு சேவையைத் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்க வேண்டுமென்று தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தியதன் காரணமாக, மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு 17.4.2017 அன்று டிஜிட்டல் உரிமம் (DAS) வழங்கி ஆணையிட்டது. இந்தியாவிலேயே மாநில அரசின் நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். அதன்படி, சென்னை, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கட்டுப்பாட்டு அறை MPEG 2 தொழில்நுட்பத்திலிருந்து MPEG 4 தொழில்நுட்பத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், விலையில்லா செட்டாப் பாக்ஸ்களை கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விலையில்லா செட்டாப் பாக்ஸ்கள் சந்தாதாரர்களுக்கு உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வழியாக விநியோகிக்கப்படும். உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் விலையில்லா செட்டாப் பாக்ஸ்களை சந்தாதாரர்களுக்கு வழங்கிய பின்பு சென்னையில் உள்ள கட்டுப்பாட்டு அறையிலிருந்து அந்த செட்டாப் பாக்ஸ்கள் செயலாக்கம் செய்யப்படும்.

உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் சந்தாதாரர்களை நேரில் சந்தித்து, வாடிக்கையாளர் விண்ணப்பப் படிவத்தினை (Customer Acquisition Form – CAF) பூர்த்தி செய்து, செட்டாப் பாக்ஸ்களை வழங்கி, அதற்கு இணைப்பு கொடுப்பது. மேலும், அதனை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக, உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் ஒவ்வொரு இணைப்பிற்கும் ரூ. 200/– (ரூபாய் இருநூறு மட்டும்) **ஒரு முறை செயலாக்கத் தொகையாக** (One time Activation Fee) சந்தாதாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

Standard Definition (SD) சேனல் தொகுப்புகள் (Channel Packages) அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற வகையில் திட்டமிடப்பட்டு, பின்வருமாறு நான்கு தொகுப்புகளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

| வரிசை எண் | தொகுப்பின் பெயர் | கட்டண சேனல்களின் எண்ணிக்கை | கட்டணமில்லா சேனல்களின் எண்ணிக்கை | மொத்த சேனல்களின் எண்ணிக்கை | மாதச் சந்தா (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1 | தொகுப்பு – 1 | 22 | 158 | 180 | ரூ.125 |
| 2 | தொகுப்பு – 2 | 72 | 158 | 230 | ரூ.175 |
| 3 | தொகுப்பு – 3 | 102 | 158 | 260 | ரூ.225 |
| 4 | தொகுப்பு – 4 | 142 | 158 | 300 | ரூ.275 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சரக்கு மற்றும் சேவை வரி இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான சரக்கு மற்றும் சேவை வரி 18% கூடுதலாக வசூலிக்கப்படும்.

2016ஆம் ஆண்டு சட்டமன்றப் பொது தேர்தலின் போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில், அரசு கேபிள் டிவி இணைப்பு பெற்றுள்ளவர்களுக்கு செட்டாப் பாக்ஸ் விலையின்றி வழங்கப்படும் என்றும், அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் குறைந்த கட்டணத்தில் தரமான சேவை தொடர்ந்து வழங்கப்படும் என்றும், டிஜிட்டல் ஒளிபரப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, தற்பொழுது டிஜிட்டல் உரிமம் பெறப்பட்டு, விலையில்லா செட்டாப் பாக்ஸ் வழங்கப்பட்டு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டு தேர்தல் அறிக்கை முழுமையாக செயலாக்கம் பெற்றுள்ளது. இன்னும் மூன்று மாத காலத்திற்குள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அனைத்து சந்தாதாரர்களுக்கும் செட்டாப் பாக்ஸ்கள் விலையின்றி வழங்கப்பட்டு டிஜிட்டல் கேபிள் டிவி சேவை வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ள இத்திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் ஆட்சி நடத்தும் இந்த அரசுக்கு மேலும் ஒரு மணிமகுடமாய் அமைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தகவல் தொழில் நுட்பவியல் துறையின் முதன்மைச் செயலாளர் திரு.தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., பொது மேலாளர் திருமதி பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 01.09.2017**